**Source:** *Tamil Murasu*, p3
**Date:** 11 September 2017

# முதியவர்களுக்கு உதவ விரும்பும் சசிந்திரன்

வயதானவர்களுக்கு ஏற்படும் 'டிமென்ஷியா' எனப்படும் ஒரு வகை ஞாபகமறதி நோயைப் பற்றி கற்றுக்கொண்டு அந்த வியாதியால் அவதிப்படுபவர்களுக்கு உதவ வேண்டும் என்ற குறிக்கோளுடன் இருக்கிறார் சசிந்திரன் தியாகராஜன், 25.

இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்கள் நோய்க்கான அறிகுறிகளைத் தாமதமாகத்தான் கண்டுபிடிக்க முடிகிறது. இந்தச் சூழ்நிலையை மாற்றியமைத்து முதியோர்களுக்கு ஞாபகமறதி நோயால் ஏற்படும் பாதிப்பின் அளவையும் நோயின் வேகத்தையும் குறைக்க விரும்புகிறார் சசிந்திரன்.



தேசியப் பல்கலைக்கழகத்தில் வாழ்வியல் துறையில் பட்டம் பெற்ற சசிந்திரன் தியாகராஜன்.

அண்மையில், சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகத்தில் வாழ்வியல் துறையில் பட்டம் பெற்ற சசிந்திரன், அடுத்ததாக டியூக்-என்யுஎஸ் மருத்துவப் பள்ளியில் படிப்பை மேற்கொள்கிறார்.

பல்கலைக்கழகத்தில் படிப்பில் தொடர்ந்து சிறப்பாகச் செயல்பட்டதோடு மற்ற புறப்பாட நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு தமது திறன்களை வளர்த்துக் கொண்டார் சசிந்திரன்.

தமது 'ஏ' நிலை தேர்வுகளில் அவ்வளவு சிறப்பாகச் செய்யவில்லை என்று எண்ணிய சசிந்திரன், பல்கலைக்கழகத்தில் கல்வியில் மிகுந்த கவனம் செலுத்தினார். அதன் பயனாக சிறந்த தேர்ச்சி பெற்றதோடு இரண்டு முறை தலைமை ஆசிரியரின் பட்டியலிலும் இடம் பிடித்தார்.

முதல் ஆண்டில் படிப்பில் மட்டுமே கவனம் செலுத்திய அவர், பிறகு நரம்பியல் துறை சார்ந்த இணைப்பாட நடவடிக்கை ஒன்றைத் தொடங்கினார்.

வெவ்வேறு பாடங்களைப் படிக்கும் மாணவர்களோடு ஒன்று சேர்ந்து இந்த இணைப்பாட நடவடிக்கையில் அவர் ஈடுபட்டார். அந்தக் குழுவினர் நரம்பியல் துறை பற்றிய பல்வேறு சுவையான, ஆக்கபூர்வமான கலந்துரையாடல்களை மேற்கொண்டனர்.

'சாதனா' என்னும் திட்டத்தின் கீழ் குறைந்த வருமானக் குடும்பங்களைச் சேர்ந்த தொடக்கக் கல்லூரி மாணவர்களுக்கு துணைப்பாட வகுப்புகளை நடத்தும் மாணவர்களிடையே சசிந்திரனும் ஒருவராக இருந்தார்.

இந்தச் செயல்பாட்டில் அவர் காட்டிய ஈடுபாட்டைப் பாராட்டி, 11ஆம் தேசியப் பல்கலைக்கழக மாணவர் சாதனைப் பாராட்டு விழாவில் அவருக்கு சமூக சேவைக்கான விருது வழங்கப்பட்டது.

அதுமட்டுமின்றி, அவர் 2015ஆம் ஆண்டில் நடைபெற்ற 'சங்கே முழங்கு' நிகழ்ச்சிக்கான பாடல் வரி எழுதும் பட்டறை, போட்டியை நடத்தினார். தேசிய இளையர் சங்கம் அந்தப் போட்டி, பட்டறைகளுக்கான மானியத்தை வழங்கியது.

சசிந்திரனுக்கு ஆராய்ச்சிகளில் மிகுந்த ஆர்வம் இருப்பதால் ஆய்வுக் கட்டுரைகள் எழுதி வருகிறார். டியூக்-என்யுஎஸ் பள்ளியில் இப்போது பயிலும் சசிந்திரன், மருத்துவப் பாடத்தில் முனைவர் பட்டக் கல்வியை ஏழு ஆண்டுகளுக்கு மேற்கொள்ள இருக்கிறார்.

முதியோர்களுக்கு உதவ வேண்டும் என்று விரும்பும் சசிந்திரன், மருத்துவப் படிப்பை முடித்த பிறகு, நரம்பியல் துறையில் உத்திகளைப் பயன்படுத்தி நரம்பு பாதிப்பால் அவதிப்படும் முதியவர்களின் வாழ்க்கையை மேம்படுத்த வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறார்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.

NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu,* p3
**Date:** 11 September 2017

# பலம் அறிந்து பாதையை மாற்றிய பவன்



ஆங்கிலப் பாடத் துறையில் முனைவர் பட்டம் பெற விரும்பும் பவன் மனோகரன் கல்வியில் சிறந்து விளங்கியதற்காக தலைமையாசிரியர் பட்டியலில் ஒரு முறை இடம் பிடித்தார்.

**படங்கள்: தேசியப் பல்கலைக் கழகம்**

**செய்தி: மாதங்கி இளங்கோவன்**

தேசியப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் துறையில் படிப்பைத் தொடங்கிய பவன் மனோகரன், 26, அந்தத் துறையில் பயில மிகுந்த சிரமப்பட்டார். முதலாம் ஆண்டில் அவரால் 2.0 புள்ளிகள்தான் எடுக்க முடிந்தது. அதனால் மிகுந்த வருத்தம் அடைந்தார் பவன்.

தம்முடைய திறமையும் ஆர்வமும் பொறியியலில் இல்லை, மொழிகள் கற்பதில்தான் இருக்கிறது என்பதை உணர்ந்தார்.

பின்னர், பல்கலைக்கழகத்தின் அனுமதியுடன் பொறியியல் துறையிலிருந்து வெளியேறி ஆங்கிலப் பாடத் துறையில் சேர்ந்துகொண்டார்.

தமக்குக் கிடைத்த இன்னொரு வாய்ப்பை முழுவதும் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்த வேண்டும் என்று தீர்மானித்த பவன், தம்முடைய முழுக் கவனத்தையும் படிப்பில் திருப்பினார்.

மேலும், பல்கலைக்கழகத்தில் பிரஞ்சு மொழியைப் படித்தபோது அதில் அவருக்கு மிகுந்த ஈடுபாடு ஏற்பட்டது.

எனவே, அந்தப் பாடத்தில் அவர் சிறந்த தேர்ச்சி பெற்றார்.

பிரஞ்சு பாடத்தில் நல்ல மதிப்பெண்கள் பெறும் மாணவர்களுக்குத் தரப்படும் 'பிரஞ்சு அலும்னை பிரஞ்சு லேங்குவேஜ்' விருதையும் பவன் பெற்றார்.

இவற்றுக்கிடையே, தம்மால் இயன்ற சேவையை மக்களுக்குச் செய்வதிலும் தம்மைத் தயார்ப்படுத்திக்கொள்ள வேண்டும் என்று விரும்பினார் பவன்.

சிங்கப்பூரைப் பிரதிநிதித்து, 'லேப்சிட்டோயென் 2015' என்னும் பருவநிலை மாற்றம், மனித உரிமைகள் பற்றி இளையர்களுக்காக பாரிசில் நடத்தப்பட்ட உலகளாவிய மாநாட்டில் கலந்துகொண்டார்.

பருவநிலை மாற்றம் குறித்தும் உலக அளவில் மனித உரிமைகள் குறித்தும் இந்த மாநாட்டில் கலந்துகொண்ட பல்வேறு நாட்டினரின் கருத்துகளை அறிந்துகொண்டதுடன் அதனை சிங்கப்பூர் சூழலுடன் ஒப்பிட்டுப் பார்க்கவும் முயற்சி செய்தார்.

தேசியப் பல்கலைக்கழகத்தில் பயின்ற காலத்தில் செக் குடியரசு, நாட்டிங்ஹாம் போன்ற இடங்களில் ஒரு சில மாதங்களுக்குப் பல்கலைக்கழகப் படிப்பை மேற்கொள்ளும் வாய்ப்பு பவனுக்கு வாய்த்தது.

கல்வியில் சிறந்து விளங்கியதற்காக தேசியப் பல்கலைக் கழகத்தில் தலைமையாசிரியரின் பட்டியலில் ஒருமுறை இடம் பிடித்தார்.

இங்கிலாந்தில் உள்ள பல்கலைக்கழகம் ஒன்றில் ஆங்கிலத் துறையில் முனைவர் பட்டம் பெற விரும்பும் பவன், பல்கலைக் கழகங்களில் மாணவர்களுக்கு ஆங்கிலப் பாடம் கற்றுத் தர விரும்புகிறார்.

பொதுவாக, மொழி சார்ந்த பாடங்களை வாழ்வியலோடு தொடர்புப்படுத்தி விருப்பத்துடன் கற்கவேண்டும் என்று கூறும் பவன், மாணவர்களிடையே மொழியின் மீதான ஆர்வத்தை வளர்க்க பல்வேறு உத்திகளைக் கையாளவும் விருப்பம் கொண்டுள்ளார்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.